RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s125

OPEN ACCESS

# பரிபாடலில் பண்பாட்டுக் கூறுகள்

**மா.முரளி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி-628003, தமிழ்நாடு, இந்தியா.

# Cultural Elements in Paripadal

**M. Murali** [a, *]

[a] Department of Tamil, Kamaraj College, Thoothukudi-628003, Tamil Nadu, India.

* Corresponding Author:
muralidev1980@gmail.com

Received: 05-03-2021
Revised: 07-01-2022
Accepted: 13-01-2022
Published: 25-02-2022

Check for updates

**ABSTRACT**

Language contributed to human evolution and the development of culture Literature is built from language. It helps all to understand themselves better and connect with the world around them in a deeper way by exploring universal themes, through literature welcome to know the ancestral period, their way of life, their religion habits and their manners etc. This article explores the cultural elements in paripadal. In sangam literature, Paripadal appears in the latter part. "Thanmai, Munnilai, Padarkai, Idapeyar, Naan (Personal Pronouns – I, We, You, He, She, They, and It) The above lines appear first in paripadal only. The tense denoting present tense and vocabulary adjective is also mentioned in Paripadal.

**Keywords:** Kudavala, Kurumani, Neimaan, Inthuyil, Weight, Maiyurai, Mudivisai, Sagadai

## முன்னுரை

பண்பாட்டுக் கூறுகளைப் பற்றி பத்துப்பாட்டும் புறநானூறும் புலப்படுத்தியது போலப் பரிபாடலும் புலப்படுத்துகின்றன. பழந்தமிழர் வாழ்வியலில் இடம் பெறும் கல்வி, வழிபாடு, கட்டிடம், இசை, ஓவியம், உழவு, வாணிபம், அணிகலன், நறுமணப்பொருட்கள், போர்முறை, விளையாட்டு ஆகியவற்றைப் பற்றி இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

தனி மனிதன் சமூகத்துடன் சேர்ந்திருப்பதும் சமூகம் தனிமனிதனுக்கு உணர்த்துவதும் பண்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும். பண்பாடு இல்லை என்றால் உயிர்கள் இல்லை. பண்பாடு என்ற சொல்லைப் பிரித்தால் (பண் என்பது பாடல் அல்லது இசை என்னும் பொருளைக் குறிக்கும். பாடு என்பது படு என்பதன் நீட்டல் விகாரம். படு என்பது செம்மைப்படுவதாகும். மனித மனத்தோடு அவர் தம் வாழ்க்கையையும் செம்மைப்படுத்துவதே பண்பாடு ஆகும். பண்பாடு பற்றி இலக்கியங்களில்,

'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்'

'பண்புடையாய் பாட்டுண்டு உலகம் அ∴தின்றேல்

மண்புக்கு மாய்வது மண்' (Parimelalhagar, 2002).

## பண்பாட்டின் கல்வி நிலை

பண்பாடு என்ற நிலைக்கு மக்களின் கல்வி நிலையே காரணமாகும். தமிழக வேந்தர் பலர் இலக்கியங்களையும் கலைகளையும் அறிந்திருந்தனர். பரிபாடலில் மூவேந்தர்கள் பற்றிய செய்திகள்

காணப்படுகின்றன. அவர்களுள் பாண்டிய மன்னர்களில் ஒருவன் மிகச் சிறந்த புலவனாகவும் கலைஞனாகவும் இருந்துள்ளனர்.

'தெரிமான் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்று பரிபாடல் திரட்டு கூறுகிறது. திருமாலை முத்தமிழோடு தொடர்புபடுத்திக் கூறியிருப்பதும்,

'சொல்லியற் புலவ நல்லியாழப் பாண'

'இடவல குடவல'

என்று திருமாலைப் போற்றிப் பாடியுள்ளதைக் காணலாம் (Soma Sundaran, 1957).

பண்டைய மதுரையில் கல்வி கற்கத் தொடங்கும் முன் இளஞ்சிறுவர்கள் மையோலை படிப்பதனை மலபுலவர் என்று தமிழ் இலக்கிய நூல்கள் பல இயம்புகின்றன. நான் மறைகளையும் நன்குணர்ந்த அந்தணர்கள் பலர் மதுரையில் வாழ்ந்தனர். அவர்கள் விடியற்காலையில் எழுந்து வேதம் ஓதினர். அவ்வேத ஒலி கேட்டு, மதுரை மக்கள் துயில் எழுதுவார்களே தவிர சேவலின் கூவலைக் கேட்டு அல்ல என்பதனை,

"பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த

நான்மறைக் கேள்வி நவில்குறல் எடுப்ப

ஏம இன்துயில் எழுதல் அல்லதை

வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்

கோழியின் எழாழதெம் பேரூர் துயிலே"

என்ற பாடலில் தமிழர்கள் பரிபாடல் காலத்திலேயே கல்வி நிலையில் மேலோங்கிப் பண்பாட்டில் காணமுடிகிறது (Soma Sundaran, 1957).

## கட்டிடக்கலை

மதுரை நகர் நடுவண் அமைந்திருந்த பாண்டியன் மன்னனது கோயில், தாமரை மலர் நடுவே இருக்கும் பொருட்டும் போன்றது என்றும், கோயிலைக் சுற்றியுள்ள பல தெருக்களும் தாமரையின் இதழ்கள் போன்றவை என்றும், மதுரை நகர் திருமாலின் உந்தியில் மலர்ந்த தாமரை மலர் போன்றது என்றும் புலவர் ஒருவர் புனைந்துள்ளார்.

"மாயோன் கொழுழ் மலர்ந்த தாமரைப்

பூவோடு புரையும் சீரும் பூவின்

இதழ் கத் தயை தெருவம் இதழகத்து

அரும் பொருட்டனைத்தே அண்ணல் கோயில்"

மதுரையின் தெருக்கள் அமைப்பை நோக்கும் போது, முந்திய காலத்தே நகரமைப்புத் திட்டமிடப்பட்டு இருந்தன. புல நிலைகனையுடைய பெருமாளிகைகள் இருந்ததற்குப் பரிபாடல் சான்றாக அமைகின்றது (Soma Sundaran, 1957). அணிகலன்கள்:

கைகளில் பவளம், குவளத் தண்டும் அணிந்தனர்.

காதில் குனைப்பூ அசோகந்தளிரையும் சொருகினர்.

தொய்யகம் எனப் பெயர் கொண்டதலை கோலத்தைப் பெண்கள் சென்னில் வேய்ந்தனர் (Soma Sundaran, 1957)

மார்பகத்தில் முத்து, பவளம், பொன்மாலை அணிந்தனர்

நெற்றியில் திலகமும் காதில் தோடும் மகர குண்டலமும் தோளில் தொடியும் வளையும் பூண்டனர் (Soma Sundaran, 1957)

## இசை

பழந்தமிழ் வாழ்வில் இசை பிணைந்திருந்தது வண்டின் ஒலி, தும்பின் ஓசை, குயிலின் குரல், அருவியின் முழக்கம் முதலிய இயற்கை இசையைச் செவிமடுத்து மக்கள் மகிழ்ந்தனர். பரிபாடலில் கொளை இயல் என்னும் சொற்கள் இசைப்பாட்டை குறிக்கிறது. முடிவு, யாழ், குழல், தூம்பு, முரசு, இனை, மந்திரி, தடார், தன்னுமை, மகுள், ஒத்து, துடி, பிறை முதலிய இசைக்கருவிகளைப் பரிபாடல் குறிப்பிடுகின்றது.

தாளம் - ஆத்து யாண்டில்

யாழ் - கூரம்

ஏழு வகைப் பாலைப்பண், மருதப்பன் நைவளம்

இளிவாய்ப் பாலை

குரல்வாய்ப் பாலை (Soma Sundaran, 1957)

## திருவிழா

நன் நாட்களில் விழாக்கள் நடைபெற்றன. திருவாதிரை நாளில் சிவபெருமானுக்கு விழா எடுத்தனர். அவ்விழாவினைப் பராசக்திக்குரியதாகக் கருதினர். தை நீராடல் தவச் செயலாக மதிக்கப்படாது, ஆவணி அவிட்டத்தினையும் விழாக்களில் ஒன்றாகக் கருதினர் (Soma Sundaran, 1957).

## வாணிபம்

பண்டைக் காலத்தில் கூடல் வாணிகமும் படை மாற்றமும் இருந்தன. வணிகர் தெருக்களும் இருந்தன எனப் பரிப்பாடலின் மூலம் அறியலாம்.

'திரம் வேண்டும் பட்டின மெய்திக் கரைசேரும்

ஏறு நாவாய் வரவெழுதிக் கொள்வார் போல்'

'இரையும் கயிறும் பிணையும் இரியச்

சிதையும் கலத்தைப் பிணினாற்றிருந்தும்

தினையிற் நீ கதனும் போன்ம்'

பண்டைக் காலத்தில் நாளங்காடி என அழைக்கப்பட்டன (Swaminatha Iyer, 1987).

## விருந்தோம்பல் பண்பு

தமிழக மக்களின் பண்பாடுகளுள் மிக முக்கியமானது விருந்தோம்பல் பண்பு இப் பண்பினை பற்றி திருவள்ளுவர்,

'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பல்

வேளாண்மை செயதற் பொருட்டு'

விருந்தோம்பல் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்து என்பதையும் அறியலாம் (Parimelalhagar, 2002).

"எண்ணிறந்த புகழவை எழின் மார்பினவை

ஆங்கு காமரு கற்றமோ டொருங்கு நின் அடியுறை

யுவமியைக்தொன்றுபு வைகலும் பொலிகென

ஏமுறு நெஞ்சத்தோடும் பரவுதல்

வாய்மொழிப் புலவகின் தாணிழற் றொழிதே" (Swaminatha Iyer, 1987)

## சமூக நிலை

குடி மக்கள் தாம் வாழும் நிலத்தின் பெயரால் அழைக்கப்பட்டனர். அந்தணர், வணிகர், வேளாளர் முதலியோர்குத் தனித்தனித் தெருக்கள் இருந்தன. பாணரும் கூத்தரும் இருந்த இடங்களைக் சேரிப்பாக்கம் என்றனர். பார்ப்பனர் மக்கள் பகுதியில் மத்தியில் பெருமதிப்பு இருந்தது. அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் வையை ஆற்றின் மீதும், பார்ப்பனர்கள் மீதும் ஆணையிட்டனர்.

'பாடுவோர் பாக்கங் கொண்டென

ஆடுவோம் சேரியடைத் தெனக்' (Swaminatha Iyer, 1987)

## விளையாட்டு

பண்டைத் தமிழரின் சமூக வாழ்வில் விளையாட்டு சிறப்பிடம் பெற்றிருந்தது. இருபாலரும் அருவிகளிலும் தடாகங்களிலும் நீராடிக் களித்தனர். ஆற்றங்கரையில் பெண்கள் கழங்கு பந்து விளையாடினர். புலனாற்றில் வென்றவர் தோற்றவரின் கையைக் கட்டிப் புடைத்தனர். சிறுமகள் மணல் வீடு கட்டி விளையாடினர்.

"நெய்மாண் சிவிறியர் நீர்மணக் கோட்டினர்

வெண்கிடை மிதவையர் நன்கிடைத் தேரினர்" (Swaminatha Iyer, 1987)

## ஆடல்

ஆடல் வல்லாரைப் போட்டியில் வென்றோர் கொடி ஏற்றித் தம் வாகையைத் தெரிவிப்பர். ஆடல் தொடங்கு முன் சிலர் நறவு அருந்துவர்; ஆடுவோரை வயிரியர் என்றும், ஆடலை நிறுத்தம் என்றும் குறிப்பிட்டனர். ஆடலிற் சிறந்த மகளிர்க்கு அரசன் பரிசளிப்பதும் வழக்கம். இக்கருத்தினை

மனமகளிர் கென்னிய ராடல் தொடங்கப் (Swaminatha Iyer, 1987)

## ஓவியங்கள்

ஓவியத்தைக் குறிக்கும் ஓவு, ஓவம், ஓவியம் என்ற சொற்களுள் ஒவம் என்பதே பரிபாடலில் இடம் பெற்றுள்ளது. ஒரு பெரிய மாளிகையில் புலிமுக மாடத்தில் செய்து வைத்த புலியை உண்மையான புலி எனக்கருதித் மேல்பாயுமென யானை ஒன்று பயந்து செல்லும், கை புனைந்தியற்றும் ஓவியக்க லையினை அறிய முடிகிறது.

"சென்மன மாலுறப்ப செற்றெழின் மாடத்துக்

அப்புனை கிளர் வேங்கை காணிய வெருவுற்று

மையுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்

செய் தொழில் கொள்ளாது மதிசெத்து சிதைதர" (Swaminatha Iyer, 1987)

'மால் கடல் குடிக்கு மழைக்குரலென
ஏறெதிர்க்கும் இந்திர னிருமுருமென
மன்ற லதிரதிர மாறு மாறதிர்க்குநின்' (Swaminatha Iyer, 1987)

## இசைக்கருவிகள்

யாழ், குரல், மழவு, ஏழ்மழை, ஐம்புழை, மத்தரி, தடாரி, தன்னுமை, மகுளி, பாண்டில் துடி, தெய்வப் பிரமம் கூறம் என்பன பரிபாடல் கூறும் இசைக் கருவிகள் ஆகும். பழந்தமிழ் இசையினை ஆராய்வதற்குப் பரிபாடலில் மிகுந்திருத்தல் இன்னிசை பயனைத்தரும். தாளம், மத்தளம், சகடை (தம்பட்டம்) காடிசை, வீணை, சல்லர், சங்கு, குடமுழா போன்ற இசைக்கருவிகள் பரிபாடல் காலத்தில் இசைக்கப்பட்டன.

'தெய்வ விழவுந் திருத்து விழந்தயர்வும்
அவ்வெள் ளருவி அணிபரங் குன்றிற்கும்
தொய்யா வழுச்சீர் விளங்கெழ வையைக்கும்
கொய்யுளை மான்தேர்க் கொடித் தேரான்
கூடற்கும் கைபூழத் தடுமாற்று நன்று" (Swaminatha Iyer, 1987)

## இசை அமையும் விதம்

விடியற்காலையில் மருதப்பண்ணும் மாலையிற் செவ்வழிப் பண்ணும், நள்ளிரவில் குறிஞ்சிப் பண்ணும், பிற்காலத்தில் நைவளப் பண்ணும், இசைத்தல் குறித்துச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

மணியணி யானைமிகை மைந்தரும் மட்வாரும்
நிரைநிரை குழீஇயினர் உடன் சென்றது
குருமணி யானை இயல்தேர்ப் பொருநள்
தெரிமருதம் பாடுப"

என்ற பரிபாடலில் வையையாற்றில் திருமருத முன்னுரையில் பாணர்கள் மருதப் பண்ணைப் பாடப்பட்ட மகளிரும் ஊடியும், தேடியும் சிதைந்து சூடியும், தொழுதும் ஆடி மகிழ்ந்து வையை கூடினர். இரக்கப் பண்பை வெளிப் படுத்துமாறு அமைந்தது இப்பண் காலை வேளையில் பாணர் இதனை இசைக்கின்றனர் (Swaminatha Iyer, 1987).

விறல்செறி தூம்பின் விடுதுலைக் கேற்ப
முரல் குரல் தும்பி அவிழ் மலர் ஊத
யாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்
சுருங்கு பரந்தவை யெல்லாம் ஒலிக்கும்
இரங்கு முரசிகான் குன்று.

என்ற பாடலாக இயற்கை நிகழ்வோடு புல்லாங்குழல் பற்றிய செய்தியும் காணப் படுகின்றன (Swaminatha Iyer, 1987).

## கனவை நம்பும் வழக்கம்

பழங்கால மக்களின் நம்பிக்கைகளின் கனவு நிலை ஒன்றாகும். இந்நிலை பற்றிய குறிப்பு பரிபாடலில் இடம் பெற்றுள்ளது. பிரிந்து சென்ற நம் கணவர் வந்து நம்முடைய கைகளைப் பற்றி

வைகையில் நீராடிய நீலிச் சில பெண்கள் கனவு கண்டனர். அதிகளவு பொய்யாகாது நனவில் நிகழ்மாறு நின்னுடைய செறிந்த நிரையுடைய வையை ஆற்றில் புது வெள்ளம் வந்து அழகு பெறுவதாக என அப்பெண்கள் வரம் வேண்டி வழிபடுகின்றனர்.

'கனவில் கொப்பது கைபிழை யாகாது

கனவில் சே என்பதின் நளிபுனல் கூவயை' (Soma Sundaran, 1957)

## நோன்பு நோற்றல்

நோன்பு நோற்றல் என்பது உலகியல் பழக்கத்தில் விரதம் என்று பொருள்படும். இதற்கு உலகியல் வாழ்வை அறவே நீக்கி இறைவனை எண்ணி வாழ்தல் என்று பொருள். இதனைச்

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துணிபஞ்

சுடச்சுட நோற்கிற் யவர்க்க'

இப்பாடல் மூலம் அறியலாம் (Parimelalhagar, 2002).

## முடிவுரை

ஒரு மொழியின் வளத்தை ஒர் இனத்தின் வாழ்வியல் முறையை, நாகரீகத்தை பண்பாட்டை, கலை வடிவங்கள் வெளிப்படுத்தும் சாதனமாக இலக்கியங்கள் விளங்குகின்றன. பரிபாடல் காட்டும் ஆதிகால மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள் பழந்தமிழரின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்க்கிறது என்றால் மிகையாகாது. பழந்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளான கல்விநிலை, உழவுத்தொழில், விருந்தோம்பல், ஆடை, அணிகலன்கள் வழிபாட்டு முறைகள், பண்பு நலன்கள் மட்டும் இன்றி எக்காலத்திற்கும் பொருந்தும் பண்பாடான, மகிழ்ச்சியின் பேரின்ப நிலையான வாழ்வின் நுகர்ச்சி பற்றியும் பரிபாடல் எடுத்துக் கூறுகின்றது. பண்பாடு என்பதற்கு ஒர் ஆய்வுக் களமாகவும், பழந்தமிழரின் பண்பாட்டை அறிய நூலாகவும் பரிபாடல் உள்ளது.

## References


Mohan, R., (2008) Urai Marabugal, Manickavasagam Publishers, Chennai, Tamil Nadu, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, Tamil Nadu, India.

Rejendran, (1998) Principal Meelparvai, Annamalai University, Chidambaram, Tamil Nadu, India.

Soma Sundaranar, P. V., (1957) Paipadal moolamum Uraiyum Thirunelveli, South in Saiva Siddhanta Book Publishing House, Chennai, Tamil Nadu, India.

Subash Chandra Bose, (2020) Tamil Ilakkiya Varalaru Meera Pathipagam, Thanjavur, Tamil Nadu, India.

Swaminatha Iyer, U, Ve., (1987) Paripadal moodamum Uraiyum, Kabeer Achukoodam, Chennai, Tamil Nadu, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License